[1998 ஏப்ரல் 24

2. விதி 110-ன்கீழ் அறிக்கை அரசு அலுவலர்களுக்கு 1-1-1998 முதல் அகவிலைப்படி 3 சதவீதம் கூடுதலாக வழங்கல் குறித்து முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி தரப்படுகிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை அவைமுன் வைக்கின்றேன், தங்கள் அனுமதியோடு. மத்திய அரசு அலுவலர்களுக்கு விலைவாசிப் புள்ளி உயர்வின் அடிப்படையில் 1-1-1998 முதல் அகவிலைப்படியை ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி, மத்திய அரசு 13-4-1998 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. அதனையொட்டி, தமிழக அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்கள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் 1-1-1998 முதல் அகவிலைப்படி ஊதியத்தில் 13-ல் இருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால் குறைந்தபட்சமாக அகவிலைப்படி உயர்வு ரூ.76-ஆகவும், அதிகபட்சமாக ரூ.657/-ஆகவும் இருக்கும். இந்த அகவிலைப்படி உயர்வு, திருத்திய ஊதிய விகிதத்தில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் பொருந்தும். மேலும், இதே விகிதத்தில் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கும் இந்த அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சமையலாளர் மற்றும் உதவியாளர்களுக்கும், இதர தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கும் 1-1-1998 முதல் பின்வருமாறு தற்காலிக உயர்வு (Ad hoc increase) வழங்கப்படும்:

1998 ஏப்ரல் 24] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 10-35

1-1-1996-க்குமுன் மாதம் ரூ.150-க்குக் குறைவாக மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.10-; 1-1-1996-க்கு முன் மாதம் ரூ. 150-ம், அதற்கு மேலும் மதிப்பூதியம், தொகுப்பூதியம் அளிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.20-;

மேற்கூறிய அகவிலைப்படி உயர்வால், மொத்தத்தில் சுமார் 12.42 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள். மேலும், மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும், மத்திய அரசைப் பின்பற்றி ஒரு அகவிலைப்படித் தவணை 1-1-1998 முதல் வழங்கப்படும். அதன்படி, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களது அகவிலைப்படி, 13-லிருந்து 16 விழுக்காடு என உயர்த்தி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்சம் ரூ.38-ம், அதிகபட்சம் ரூ.290-ம் பணப்பயன் அடைவார்கள். மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், உள்ளாட்சி மற்றும் அரசு மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150 கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறத்தாழ 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் பயனடைவார்கள். மேற்குறிப்பிட்ட அகவிலைப்படி உயர்வு, 1-1-1998 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இந்தச் சலுகைகளினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய செலவினம் ரூ.200.50 கோடி ஆகும். இந்தத் திருத்திய அகவிலைப்படி உயர்வினால், வழங்கவுள்ள நிலுவைத்தொகையையும் சேர்த்து — (Arrears) — அரசுக்கு நடப்பாண்டில் 233.92 கோடி ரூபாய் மொத்தச் செலவினம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) ஆசிரியர்கள் பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து, போராட்டம் நடத்துவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானம். பிளஸ்-2 விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்து, ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவது குறித்து திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. மு. அப்பாவு